வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ, புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

நாள் 18.03.2024 திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் தொடங்கியுள்ளன.
- இந்தியாவின் துடிப்பான ஸ்டார்ட் அப் சூழல் குறித்த, 3 நாள் ஸ்டார்ட்அப் மஹாகும்ப் விழா, புதுடெல்லியில் இன்று தொடங்கியுள்ளது.
- புதுச்சேரியில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்து, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு.குலோத்துங்கன் இன்று, அனைத்து அரசியல் கட்சிகளுடன், விளக்கக் கூட்டம் நடத்தினார்.
- புதுச்சேரியில், அமைச்சர்கள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசு வாகனங்களையும், அலுவலகங்களையும், சட்டப்பேரவைச் செயலரிடம் ஒப்படைத்துள்ளனர்.

<u>மோடி – 1 (18)</u>

நாடு முழுவதும் மக்களவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் தொடங்கியுள்ளன. பல்வேறு அரசியல் கட்சிகள் கூட்டணிகளை இறுதி செய்து வருகின்றன. தேர்தல் பிரச்சாரங்களும் தொடங்கியுள்ளன. பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி தெலங்கானா மாநிலம், ஜகித்யால் பகுதியில் இன்று தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், தென் மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வலுவான ஆதரவு இருப்பதாக கூறினார். காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதற்கு, இப் பொதுக் கூட்டமே சாட்சி என்றும்

அவர் குறிப்பிட்டார். மக்களின் எண்ணங்களை முழுமையாக நிறைவேற்றி வைக்க பிஜேபி உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சக்தியை அவமதிக்கும் வகையில் மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி, வெளியிட்ட கருத்துக்களை பிரதமர் சாடினார். சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கருவி நிலவில் தரையிறங்கிய இடத்திற்கு, சிவசக்தி பாயிண்ட் என பெயர் சூட்டப் பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ், பிஆர்எஸ் போன்ற குடும்ப அரசியல் கட்சிகள், 2ஜி ஊழல், நேஷனல் ஹெரால்டு ஊழல், போபர்ஸ் ஊழல் மற்றும் மாட்டுத்தீவன ஊழலில் ஈடுபட்டதாக பிரதமர் தெரிவித்தார்.

<u>மோடி – 2 (13)</u>

தொடர்ந்து, கர்நாடக மாநிலம் ஷிவ்மொகாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். ஷிவ்மொகா மாவட்டத்தைச் சேர்ந்தவரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. எடியூரப்பா, மற்றும், ஷிவ்மொகா, உடுப்பி, சிக்மகளூர், சித்ரதுர்கா, தாவணகெரே தொகுதிகளைச் சேர்ந்த பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை கோவையில், கவுண்டம்பாளையம் முதல், ஆர்.எஸ்.புரம் தபால் நிலையம் வரை சாலை பவனி நடத்துகிறார். இதை ஒட்டி அப்பகுதியில் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே பிரதமரின் பேரணியில் பங்கேற்பதற்காக, கோவை வந்த மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், தமிழகத்தில் பிஜேபி கூட்டணி குறித்த அறிவிப்பு இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என தெரிவித்தார்.

ஸ்டார்ட்அப் – 1 (19)

இந்தியாவின் துடிப்பான ஸ்டார்ட் அப் சூழல் குறித்த 3 நாள் ஸ்டார்ட்அப் மஹாகும்ப் விழா, புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று தொடங்கியுள்ளது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த புதுமைப் படைபாளர்கள் மற்றும் அவர்களின் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை, முதலீட்டாளர்கள் மற்றும் கார்ப்பரேட் கூட்டாளிகளுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன், மத்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை, இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது. துறையின செயலர் திரு. ஆர்.கே. சிங் தொடக்க விழாவில் பேசுகையில், தற்போது உலகின் 3ஆவது மிகப்பெரிய ஸ்டார்ட்அப் தொழில் சூழலாக இந்தியா திகழ்வதாகவும், இந்தியாவில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.2016ஆம் ஆண்டு ஸ்டார்ட்அப் இண்டியா இயக்கம் தொடங்கப்பட்ட போது, இந்த எண்ணிக்கை வெறும் 300ஆக மட்டுமே இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் 670 மாவட்டங்களில் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், இத்தகைய 50 சதவிகித நிறுவனங்கள், நாட்டின் 2ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை நகரங்களில் அமைந்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

புதிய ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உருவாக, டீப்-டெக் என்னும் ஆழ்நிலை தொழில்நுட்பங்கள் அவசியம் என்றும் இதைக் கருத்தில்

ஸ்டார்ட்அப் – 2 (18)

கொண்டு, அரசின் பிரத்யேகமான டீப்-டெக் ஸ்டார்ட்அப் கொள்கை வரவிருக்கும் மாதங்களில் இறுதி செய்யப்படும் என்றும் திரு. ஆர்.கே. சிங் தெரிவித்தார். ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் பொருளாதார செயல்பாடுகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும் வகையில் பாரத் ஸ்டார்ட்அப் சூழல் பதிவேடு ஒன்றை அரசு அண்மையில் தொடக்கி

இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தியாவின் ஜி-20 ஷெர்ப்பா திரு. அமிதாப் காந்த் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் இந்தியாவின் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் கடந்த 8 ஆண்டுகளில் 10 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி இருப்பதாகவும், இது அல்லாது சுமார் 1 கோடி மறைமுக வேலைவாய்ப்புகள் இத்துறையினால் உருவாகி இருப்பதாகவும் கூறினார். செயற்கை நுண்ணறிவு, நிதி தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், பருவநிலை தொழில்நுட்பம் உட்பட பல்வேறு நவீன துறைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 2 ஆயிரம் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் துறையில் ஆர்வமுள்ள சுமார் 30 ஆயிரம் இளம் தொழில் முனைவோர், ஸ்டார்ட்அப் நிறுவனங்களை போற்றி வளர்க்கும் சுமார் 500 இன்குபேட்டர் அமைப்புகள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கிலான முதலீட்டாளர்கள், இந்த மாபெரும் ஸ்டார்ட்அப் மஹாகும்ப் விழாவில் பங்கேற்றுள்ளனர்.

<u>தேர்தல் பத்திரம் (12)</u>

ஒவ்வொரு தேர்தல் பத்திரத்தையும் வாங்கியது யார் என்பதையும், பணம் எந்தக் கட்சிக்குச் சென்றது என்பதையும் வெளிப்படுத்தும் வகையிலான பத்திர எண் உட்பட, தேர்தல் பத்திரங்கள் தொடர்பான எல்லா விபரங்களையும் வரும் 21ஆம் தேதிக்குள் வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் பாரத ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டுள்ளது. தேர்தல் பத்திரங்கள் தொடர்பான எல்லா விபரங்களையும் பாரத ஸ்டேட் வங்கி வெளியிட வேண்டும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு இன்று தனது உத்தரவில் கூறியது. எல்லா விபரங்களையும் வெளியிட்டது குறித்து பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர், வரும் 21ஆம் தேதி மாலை 5 மணிக்குள் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

புதுச்சேரி கூட்டம் – 1 (16)

புதுச்சேரியில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் மற்றும் தேர்தல் செலவினங்கள் குறித்து, மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு.குலோத்துங்கன் இன்று, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு பெற்ற அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன், விளக்கக் கூட்டம் நடத்தினார். தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலாகும் காலத்தில் செய்யத் தக்கவை மற்றும் செய்யத் தகாதவை குறித்தும், தேர்தல் செலவினங்களை உரிய முறையில் பராமரித்து உரிய காலத்திற்குள் செலவுக் கணக்குகளை தாக்கல் செய்வது குறித்தும், இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. கோவில், தேவாலயம் மற்றும் மசூதிகளில் வாக்கு சேகரிக்கக் கூடாது என்றும், அனுமதி இல்லாமல் ஒலிபெருக்கிகளை பயன்படுத்தக்கூடாது என்றும், மது விநியோகம் செய்யக்கூடாது என்றும், இதையெல்லாம் செய்தால் நடத்தை விதிமுறை மீறலாகும் என்பதால், அரசியல் கட்சிகள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி கேட்டுக்கொண்டார். நடத்தை நெறிமுறைகள் மற்றும் செலவுக் கணக்குகள் குறித்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கும்,

புதுச்சேரி கூட்டம் –2(5)

கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட உதவி ஆட்சியர் திரு.யஷ்வந்த் மீனா, மாவட்ட துணை தேர்தல் அதிகாரி திரு. வினய ராஜ், நோடல் அதிகாரிகள் திரு. சிவகுமார், திரு. ஜெகநாதன் மற்றும் தேர்தல் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வாகனம் ஒப்படைப்பு (7)

மக்களவை தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் அமலில் உள்ளதால் புதுச்சேரியில் அமைச்சர்கள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசு வாகனங்களையும், அரசு அலுவலகங்களையும் பயன்படுத்தக்கூடாது என தலைமைத் தேர்தல் அலுவலர் திரு. ஜவஹர் உத்தரவிட்டதை தொடர்ந்து, இன்று அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், வாகனங்கள் மற்றும் அலுவலகங்களை சட்டப்பேரவைச் செயலர் திரு. தயாளனிடம் ஒப்படைத்தனர்.

தமிழிசை (7)

தெலங்கானா ஆளுநரும் புதுச்சேரி துணைநிலை ஆளுநருமான டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், பதவியை ராஜிநாமா செய்து குடியரசு தலைவரிடம் கடிதம் சமர்ப்பித்துள்ளார். ஹைதராபாத் ராஜ்பவன் இன்று, அறிக்கை ஒன்றில் இதை தெரிவித்துள்ளது. ராஜிநாமாக் கடிதம் இதுவரை ஏற்கப் படவில்லை. இதற்கிடையே டாக்டர் தமிழிசை சௌந்தராஜன் மக்களவை தேர்தலில் தென் சென்னை அல்லது தமிழகத்தில் வேறு ஒரு பகுதியில் இருந்து போட்டியிடக்கூடும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

திமுக கூட்டணி (12)

தமிழகத்தில் மக்களவை தேர்தலுக்கான திமுக கூட்டணியில் காங்கிரஸ் மற்றும் மதிமுக போட்டியிடும் தொகுதிகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி காங்கிரஸ் கட்சி, திருவள்ளூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், கரூர், கிருஷ்ணகிரி, கடலூர், மயிலாடுதுறை தொகுதிகளிலும், புதுச்சேரி தொகுதியிலும் போட்டியிடுகிறது. மதிமுக-விற்கு திருச்சி தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரு கட்சிகளின் நிர்வாகிகளுடன், தொகுதிப் பங்கீடு குறித்து இன்று சென்னையில், திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் நடத்திய

ஆலோசனைக் கூட்டத்தில், இம்முடிவுகள் எட்டப்பட்டன. திருச்சி மக்களவை தொகுதியில் மதிமுக சார்பில் திரு. துரை வைகோ போட்டியிடுவார் என்று மதிமுக அறிவித்துள்ளது.

<u>டிரான்ஸ்மிட்டர் (8)</u>

புதுச்சேரி துத்திப்பட்டில் செயல்பட்டு வரும், அகில இந்திய வானொலியின் டிரான்ஸ்மிட்டர் மையத்தில் புதுப்பிக்கப்பட்ட 20 கிலோவாட் மத்திய அலைவரிசைக்கான டிரான்ஸ்மிட்டரை சென்னை அகில இந்திய வானொலியின் மண்டலத் தலைவர் திருமதி. கீதா ராணி இன்று இயக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை தலைமை இயக்குநரும், சென்னை கிளஸ்டர் தலைவருமான திரு. பாண்டி, மற்றும் புதுச்சேரி வானொலி நிலைய பொறியியல் பிரிவு துணை இயக்குநர் திருமதி.லட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<u>வானிலை (10)</u>

புதுச்சேரியில் வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், வரவிருக்கும் நாட்களில் ஓரிரு இடங்களில் வெப்பம் மேலும் அதிகரிக்கலாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்து இருப்பதைக் கருத்தில் கொண்டு, நிலவரங்களை சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் இன்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடத்தினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுகாதாரம், பொதுப்பணி, மின்சாரம், கல்வி, சமூக நலம் உள்ளிட்ட துறைகள் மற்றும் நகராட்சி-கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## பேரிடர் (16)

பேரிடர் சம்பவங்களை எதிர்கொள்ள ஒட்டுமொத்த சமூகமே ஆயத்தமாதல் அவசியம் என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் திரு ராஜேந்திர சிங் கூறியுள்ளார். தொழிலக பாதுகாப்பும், பேரிடர்க் குறைப்பும் என்ற தலைப்பில் புதுடெல்லியில் நடைபெறும் 2 நாள் மாநாட்டில் இன்று, தொடக்க அமர்வில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மனிதர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும், பாதுகாப்பை பராமரிப்பது, ஒரு கலாச்சாரம் என்றும் மத்திய-மாநில அரசுகள், அமைப்புகள், உள்ளூர் மக்கள் உட்பட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே, பேரிடர் சம்பவங்களை திறம்பட்ட முறையில் எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். உத்தராகண்ட் மாநிலம், சில்க்யாரா சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் இத்தகைய ஒருங்கிணைப்பு மூலமாகவே மீட்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள், பேரிடர் நிர்வாகத் திட்டங்களை உருவாக்கி ஏற்று வருவதை திரு. ராஜேந்திர சிங் பாராட்டினார். தொழிற்சாலைகளும் இத்தகைய திட்டங்களை வைத்திருக்க வேண்டியது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

## க்யூட் தேர்வு (12 )

மத்திய பல்கலைக் கழகங்களின் இளங்கலை படிப்புகளில் சேருவதற்கான க்யூட் நுழைவுத் தேர்வு, ஏற்கனவே அறிவித்தபடி, மே மாதம் 15 முதல், 31ஆம் தேதி வரை நடைபெறும் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. மே 20, 25 ஆகிய தேர்தல் தேதிகள் இக்கால கட்டத்திற்குள் வருகின்ற போதிலும், க்யூட் தேர்வுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் அவகாசம், வரும் 26ஆம் தேதி முடிந்த பின்னர், எந்தெந்தப் பகுதிகளில் இருந்து எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன என்பதையும், தேர்தல் தேதிகளையும் கருத்தில் கொண்டு,

க்யூட் தேர்வுக்கான தேதிகள், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால கட்டத்திற்கு உட்பட்டதாக தீர்மானிக்கப்படும் என்று, யுஜிசி தலைவர் திரு.ஜகதீஷ் குமார், சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளார்.

<u>ரயில் விபத்து (10)</u>

ராஜஸ்தானில் நேற்று இரவு 1 மணிக்கு அதிவிரைவு ரயில் ஒன்றின் எஞ்சினும் 4 பெட்டிகளும் தடம் புரண்டதால், போக்குவரத்து பாதிக்கப்பட்ட ஆஜ்மிர்-ஜெய்பூர் ரயில் பாதையில், இன்று இரு மார்க்கங்களிலும், ரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கியுள்ளது. சபர்மதி-ஆக்ரா கென்ட் ரயில் புறப்பட்டுச் சென்றதை தொடர்ந்து இதர ரயில் சேவைகளும் தொடங்கி இருப்பதாக, வடமேற்கு ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விபத்தினால் 6 ரயில்கள் முழுமையாகவும் 8 ரயில்கள் பகுதி அளவிலும் ரத்து செய்யப்பட்டன. மேலும் பல ரயில்கள் தாமதமாக இயங்கின. இந்த விபத்தில் எவரும் காயமடைந்ததாக தகவல் இல்லை.